முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,
**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.
2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**E.A.No.53/2017**

**in**

**E.P.24/2016**

in

**O.S.No.54/2006**

அய்யன் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பாலுப்பிள்ளை (இறப்பு) .... பிரதிவாதி
2. கோமதி (இறப்பு) .... எதிர்மனுதாரர்/உத்தேச 2ம் எதிர்மனுதாரர்/இறந்துபோன பிரதிவாதியின் வாரிசு
3. சங்கரநாராயணன் .... 3ம் எதிர்மனுதாரர்/ இறந்துபோன உத்தேச 2ம் எதிர்மனுதாரரின் வாரிசு

(**E.A.No.01/2023 நாள் 17.10.2023 உத்தரவின்படி காலம்சென்ற 2ம் எதிர்மனுதாரரின் வாரிசான 3வது கூடுதல் எதிர்மனுதாரர் இம்மனுவில் கட்சி சேர்க்கப்பட்டு, இ.ம.எண்.03/2024 நாள் 09.10.2025 உத்தரவின்படி இம்மனு திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

இம்மனுவானது 20.11.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சங்கரநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.மருதராஜ் அவர்கள் ஆஜராகியும், இம்மனுவிற்கு Allowed and terms no counter என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு, மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.02 17:33:23 +0530

உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22, விதி 4 மற்றும் 151–ன்படி, இவ்வழக்கு தீர்ப்பாணைக்கு பின் இறந்துபோன பிரதிவாதிக்கு பதில், எதிர்மனுதாரரை வாரிசு நிலைமையில் E.P.No.24/2016 நிறைவேறுதல் மனுவில் தரப்பினராக கட்சி சேர்க்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்** :–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், பிரதான வழக்கில் பிறந்த 26.03.2007 தேதிய தீர்ப்பாணையை நிறைவேற்றும்பொருட்டு E.P.No.24/2016 நிறைவேறுதல் மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கின் பிரதிவாதியான பாலுபிள்ளை என்பவர் இவ்வழக்கு தீர்ப்பாணையை அனுசரித்து மனுதாரர் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த E.P.No.38/2015 நிறைவேறுதல் மனு நிலுவையில் இருந்த வந்த சமயத்தில் காலமாகிவிடவே, இறந்துபோன பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்க நடவடிக்கை எடுக்காத காரணம் கூறி, மேற்படி E.P.No.38/2015 மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், இந்நிலையில் மேற்படி வழக்கு தீர்ப்பினை நிறைவேற்றும் பொருட்டு E.P.No.24/2016 மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், இறந்துபோன பிரதிவாதி பாலுபிள்ளை என்பவருக்கு எதிர்மனுதாரர் மட்டுமே சட்டப்படியான வாரிசு ஆவார் என்றும், இறந்துபோன பிரதிவாதியின் எஸ்டேட்டுகளை எதிர்மனுதாரரே வாரிசு நிலையில் அடைந்து அனுபவம்செய்து வருகிறார் என்றும், இறந்துபோன பிரதிவாதிக்கு எதிர்மனுதாரரை தவிர வேறு வாரிசுகள் எவரும் கிடையாது என்றும், எனவே இவ்வழக்கு தீர்ப்பாணைக்கு பின் இறந்துபோன பிரதிவாதிக்கு பதில், இந்த எதிர்மனுதாரரை வாரிசு நிலைமையில் E.P.No.24/2016 நிறைவேறுதல் மனுவில் தரப்பினராக கட்சி சேர்க்க உத்தரவிடவேண்டியது அவசியமாக உள்ளது என்றும், இல்லையெனில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், இம்மனு அனுமதிக்கப்பட்டு இறந்துபோன பிரதிவாதிக்கு வாரிசு நிலைமையில் இந்த எதிர்மனுதாரரை நிறைவேறுதல் தரப்பினராக கட்சி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.02 17:33:31 +0530

சேர்ப்பதால் எதிர்மனுதாரருக்கு யாதொரு கஷ்ட, நஷ்டங்களும் ஏற்படக்கூடுவதில்லை என்றும், மேற்படி பிரதிவாதி முந்தைய நிறைவேறுதல் மனுவான E.P.No.38/2015 மனுவில் இந்நீதிமன்றம் மூலம் சென்ற அறிவிப்பானது மேற்படி பிரதிவாதி இறந்துவிட்டதாக திருப்பப்பட்ட பின்னரே மேற்படியார் இறந்தவிபரம் மனுதாரருக்கு தெரியும் என்றும், எனவே மேற்படி பிரதிவாதி இறந்த தேதியானது மனுதாரருக்கு தெரியாது என்றும், இம்மனுவின் மத்தியில் 2ம் எதிர்மனுதாரர் கோமதி என்பவரும் 3ம் எதிர்மனுதாரரை அடுத்த வாரிசாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், ஆதலால் 3ம் எதிர்மனுதாரரை மனுவில் கட்சி சேர்த்து இம்மனுவை மேல்நடத்திக்கொள்ள அனுமதி கோரி தாக்கல் செய்திருந்த மனு அனுமதிக்கப்பட்டு மேற்படியாரும் இம்மனுவில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், ஆகையால், இவ்வழக்கு தீர்ப்பாணைக்கு பின் இறந்துபோன பிரதிவாதிக்கு பதில், எதிர்மனுதாரரை வாரிசு நிலைமையில் E.P.No.24/2016 நிறைவேறுதல் மனுவில் தரப்பினராக கட்சி சேர்க்க உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவின் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு Allowed and terms no counter என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது, இவ்வழக்கு தீர்ப்பாணைக்கு பின் இறந்துபோன பிரதிவாதிக்கு பதில், எதிர்மனுதாரரை வாரிசு நிலைமையில் E.P.No.24/2016 நிறைவேறுதல் மனுவில் தரப்பினராக கட்சி சேர்க்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.02 17:33:39 +0530

6) இம்மனுவின் மனுதாரர் தரப்பில், இவ்வழக்கின் பிரதிவாதியான பாலுபிள்ளை என்பவருக்கு 2 வது எதிர்மனுதாரர் கோமதி மட்டுமே சட்டப்படியான வாரிசு ஆவார் என்றும், இம்மனுவின் மத்தியில் 2 ம் எதிர்மனுதாரர் கோமதி என்பவரும் 3 ம் எதிர்மனுதாரரை அடுத்த வாரிசாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், ஆதலால் 3 ம் எதிர்மனுதாரரை மனுவில் கட்சி சேர்த்து இம்மனுவை மேல்நடத்திக்கொள்ள அனுமதி கோரி தாக்கல் செய்திருந்த மனு அனுமதிக்கப்பட்டு மேற்படியாரும் இம்மனுவில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், எனவே மேற்படியாரை E.P.No.24/2016 நிறைவேறுதல் மனுவில் தரப்பினராக கட்சி சேர்க்க வேண்டும் என கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

7) மேலும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு Allowed and terms no counter என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், நிலுவையில் உள்ள E.P.No.24/2016 மனுவின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு இறந்துபோன காலம்சென்ற 1 வது எதிர்மனுதாரரின் வாரிசான இம்மனு மத்தியில் காலம்சென்ற 2 வது எதிர்மனுதாரரின் வாரிசான 3 ம் எதிர்மனுதாரரை வாரிசாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியம் என்பதால் இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

8) **இறுதியாக:—**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.02 17:33:46 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:–** **–** இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.02 17:33:53 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

முு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
E.A.No.53/2017 in
E.P.24/2016 in
O.S.No.54/2006
உத்தரவு (Draft / Fair)
நாள் : 02.12.2025